செய்தி வெளியீடு எண்: 591 நாள் : 01.11.2013

# பத்திரிக்கை செய்தி

**தீபாவளி பண்டிகைக்கு நியாயவிலை அங்காடிகள் விடுமுறை நாளான முதல் வெள்ளிக்கிழமை அன்றும் செயல்படும் என்று அறிவித்து குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை உடன் வழங்க ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி.**

**தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட நடவடிக்கை எடுத்து, தமிழக மக்களின் வாழ்வில் அன்றாடம் தீப ஒளி ஏற்றி வரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி. மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்த பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் 5 கோடியே 92 இலட்சம் ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனை.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இன்று 01.11.2013 காலை 10 மணியளவில், நந்தனம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பொது விநியோக திட்ட கிடங்கு, நியாயவிலை அங்காடிகள், அமுதம் சிறப்பங்காடி, 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் வெளிச்சந்தை அரிசி விற்பனை நிலையம், பண்ணை பசுமை நுகர்வோர் அங்காடி ஆகியவற்றை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா. காமராஜ் ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு முழுவதும் செயல்பட்டு வரும் 33,746 கூட்டுறவு மற்றும் அமுதம் நியாயவிலை அங்காடிகளுக்கு, அக்டோபர் மாத ஒதுக்கீட்டின்படி அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் முழுவதுமாக நகர்வு செய்யப்பட்டு, குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் தேவைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், நவம்பர் மாத ஒதுக்கீட்டில் 60 சதவிகிதம் பொருட்கள் முன்நகர்வு செய்யப்பட்டு, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 01.11.2013 அன்று அனைத்து அங்காடிகளுக்கும் வேலை நாளாக அறிவித்து, அத்தியாவசியப் பொருட்களை வழங்கிடவும், அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் பொது விநியோகத்திட்ட கிடங்கில் நியாயவிலை அங்காடிகளுக்கு நகர்வு செய்யப்பட்ட அத்தியாவசியப்

பொருட்களின் விவரங்களை ஆய்வு செய்து, இருப்பில் உள்ள விலையில்லா அரிசி, பருப்புவகைகள் ஆகியவற்றின் தரத்தையும் உறுதிசெய்தார். நியாயவிலை அங்காடிகள் நந்தனம் எண்.MA003 மற்றும் MA004 ஆகியவற்றில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்ற அத்தியாவசியப் பொருட்களின் தரம், எடை ஆகியவற்றை பரிசோதனை செய்தார். மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பு திட்டமான, 20ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் வெளிச்சந்தை அரிசி விற்பனை நிலையத்தை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் பொதுமக்களுக்கு தேவைப்படும் புழுங்கலரிசி, பச்சரிசி ஆகியவை மிக சிறந்த தரத்துடன் விநியோகம் செய்யப்படுவதால் இன்று வரை 279 கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் 55 ஆயிரத்து 600 குவிண்டால் அரிசி விற்பனை செய்யப்பட்டு, அனைத்துதரப்பு மக்களும் பயனடைந்து வருகின்றனர் என்று தெரிவித்தார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்ட 30 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் உற்பத்தி மையங்களிலிருந்து நேரடியாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட புதிய, தரமான காய்கறிகள் மிகக் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் வெளிச்சந்தையில் தனியார் காய்கறி கடைகள் மற்றும் பழமுதிர் நிலையம் போன்ற சிறப்பங்காடிகள் ஆகியவற்றின் விற்பனை விலை கணிசமாக குறைந்துள்ளது. பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் பொதுமக்களிடம் அமோக வரவேற்பு பெற்றதன் காரணமாக, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மேலும் கூடுதலாக 10 பண்ணை பசுமை காய்கறி விற்பனை அங்காடிகளை திறப்பதற்கு ஆணையிட்டுள்ளார்கள். ஏழை, எளிய, நடுத்தர மக்களின் அன்றாட வருமானத்தில் ஒரு பெரும் பகுதி தொகை வெளிச்சந்தை அரிசி விற்பனை, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் குறைந்த விலையில் காய்கறி விற்பனை ஆகியவற்றின் மூலம் சேமிப்பு செய்ய முடிகிறது என மக்கள் தெரிவித்தனர். தற்போது செயல்பட்டு வரும் கூட்டுறவு மற்றும் அமுதம் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் இன்று வரை 5 கோடியே 81 இலட்சம் ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்றும், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.50–க்கும்,சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.60–க்கும் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

தீபாவளிக்கு முந்தைய நாளான வெள்ளிக்கிழமை அன்று நியாயவிலை அங்காடிகள் செயல்படும் என்று அறிவித்து, 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் விலையில்லா அரிசி, மானியவிலையில் சர்க்கரை, கோதுமை, துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவற்றைப் பெற்று, தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாடவும், வெளிச்சந்தையில் 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி விற்பனை செய்யும் அங்காடிகள் மூலம் தரமான அரிசி, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தரமான புதிய காய்கறிகள் மிக குறைந்த விலையில் விற்பனை செய்து, ஏழை, எளிய, நடுத்தர வகுப்பு மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் **தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட நடவடிக்கை எடுத்து, தமிழக மக்களின் வாழ்வில் அன்றாடம் தீப ஒளி ஏற்றி வரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்து வருகின்றனர் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது அரசு கூட்டுறவு மற்றும் உணவுத்துறை செயலாளர் திருமதி. எம்.பி.நிர்மலா.இ.ஆ.ப., உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர். திரு.எஸ்.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப.,தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., பொது மேலாளர் திரு. முகமது மீரான், சென்னை மண்டல மேலாளர் திரு.சு.சாரதிகணேசன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. இராஜலட்சுமி , தமிழ்நாடு ஜவுளித் துறை கழகத் தலைவர். திரு. விருகை வி.என்.ரவி மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9